2015

2016

2017

පාර්ලිමේන්තු ප්‍රකාශන මාලා අංකය: 79

ආයතනයේ නම : දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය ගම්පහ

පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 119(4) යටතේ ගරු ආයතන භාර අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම

பாராளுமன்றத்தின் வெளியீட்டுத் தொடர் இலக்கம் :79

நிறுவனத்தின் பெயர்: மாவட்ட பெயலகம் கம்பஹ

பாராளுமன்றத்தின் அரச கணக்குக் குழுவினால் முன்வவக்கப்பட்ட அறிக்வக ததாடர்பாக நிவையியற் கட்டவை இைக்கம் 119(4) இன் கீழ் தகௌரவ அவமச்சரின் அவதானிப்புக்களும் மற்றும் அது ததாடர்பாக எடுக்கப்படும் நடவடிக்வககளும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்

Parliamentary Serial No: 79

Name of Institution: District Secretariat – Gampaha

Submission of observation of Hon Minister in charge of the institution and steps taken with regard to the reports tabled by the committee on Public Account in terms of Standing Order No.119(4)

இலங்கை பாராளுமன்றத்தின் அரசாங்கக் கணக்குக் குழுவால் சமர்ப்பிக்கப்பட்ட நிலையியற் கட்டளை 119(4) தொடர்பில் அவதானிப்புகள் மற்றும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் பாராளுமன்றத்திற்கு முன்வைத்தல்

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம்: 79

மாவட்ட செயலகம்: கம்பஹா

அ.க.கு மூலம் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள் மற்றும் வழிகாட்டுதல்கள்	**எடுக்கப்பட்ட நடவடிக்கை மற்றும் தற்போதைய முன்னேற்றம்**
1. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்களால் குறைந்தது 4 கூட்ட அமர்வுகளை கூட நடத்தப்பட்டிருக்கவில்லை. மாவட்டச் செயலகங்களுக்குட்பட்ட அனைத்து பிரதேச செயலகங்களின் கணக்காய்வுக் குழு குறைந்தளவில் கூட கூடியிருக்கவில்லை.	• வருடாந்தம் 04 மாவட்ட கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை (காலாண்டுக்கு 01 படி) நடத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அதற்கமைய, 2023 ஆம் ஆண்டுக்கான 04 கூட்டங்கள் திட்டமிட்டவாறு நடத்தப்பட்டுள்ளன. • பிரதேச கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு வருடத்தில் ஒரு பிரதேச செயலகத்திற்கு, 04 பிரதேச கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டங்கள் நடத்தப்பட வேண்டும். (காலாண்டிற்கு 01 படி) 2024 ஆம் ஆண்டு திட்டமிட்டபடி பிரதேச கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டங்களை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.
2. 2020.08.28 திகதிய இலக்கம் 01/2020 கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் 1 பகுதியின் 11.1 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள காலக்கெடுவுக்குள் நி.பி.756(6) பிரகாரம் பொருள் கணிப்பாய்வு மேற்கொள்ளப்பட்டு குறிப்பிட்ட திகதியிற்குள் உரிய அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமையதிபதியிற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	இற்றையாகும்போது பொருள் கணிப்பாய்வு அறிக்கைகள் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு முன்வைக்கப்பட்டுள்ளன. மிகைகள் இற்றையாகும்போது பொருட்கள் விவரப்பட்டியல் புத்தகத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. பற்றாக்குறையாக காண்பிக்கப்பட்ட சரக்குகளை மீண்டும் பரிசோதிக்கும்போது மாவட்ட செயலகத்திற்கு சொந்தமான ஏனைய களஞ்சியசாலைகளில் கண்டறியப்பட்டதனால் பற்றாக்குறைக் குறித்து தொடர்ந்தும் செயல்படமாட்டாதென்பதுடன், அவை இற்றையாகும்போது சரியான இடத்தில் இடநிறுவப்பட்டுள்ளன.

3. அனைத்து வாகனங்களிலும் தேசிய சின்னம் வரையப்பட்டிருக்கவில்லை.	வாகனங்களில் தேசிய சின்னம் வரைவதற்கு விலைகள் அழைக்கப்பட்டிருப்பதுடன் அடுத்து மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் நடைபெற்று வருகின்றன.
4.இணைக்கப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களைத் தவிர, அனுமதிக்கப்பட்ட வரம்பிற்கு அப்பால் பதவியணியிற்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தன..	அரசாங்க கொள்கையின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட பல்பணி ஊழியர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருப்பதுடன்இ தொடர்புடைய சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின்படி கொடுப்பனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இற்றையாகும்போது அந்த சேவையில் உள்ள பணியாளர்கள் நிரந்தரம் செய்யப்பட்டு பல்வேறு நிறுவனங்களில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.
5. மாதாந்தம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டிருக்கவில்லை.	2024 ஆம் ஆண்டு முதல், திட்டமிட்டவாறு சம்பந்தப்பட்ட குழுக் கூட்டங்கள் நடாத்தப்படுகின்றன.
6. 1946 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கம் கொண்ட நீர்ப்பாசன கட்டளைச் சட்டத்துக்கமைய மாவட்ட விவசாயக் குழுக் கூட்டங்கள் மாதந்தோறும் நடத்தப்பட்டிருக்கவில்லை.	கம்பஹா மாவட்டம் குறைந்த விவசாய சாத்தியப்பாட்டுடைய மாவட்டமாக இருப்பதால் மாதாந்தம் மாவட்ட விவசாயக் குழு நடத்தப்படுவதில்லை. மாவட்ட விவசாயக் குழுக் கூட்டத்தை சந்தர்ப்பத்திற்கு ஏற்ப நடத்த தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.
7. மாவட்ட வதிவிடக் குழு மாதாந்தம் கூடியிருக்கவில்லை.	2024 ஆம் ஆண்டு முதல் மாவட்ட வதிவிட குழு மாதம் ஒருமுறை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதுடன்அதற்கான கூட்டத்தை மாதந்தோறும் தொடர்ந்தும் நடாத்துவதற்கு நடவடிக்கையெடுப்பேன்.
8. மாவட்ட உர ஒருங்கிணைப்புக்குழு மாதாந்தம் கூடியிருக்கவில்லை.	உர வேலைதிட்டம் குறித்து மாவட்ட விவசாயக் குழுவிலும், பருவக் கூட்டங்களிலும் கலந்துரையாடப்படுவதால் இந்தக் குழு மாதந்தோறும் கூடுவதில்லை. ஒவ்வொரு பயிர் வளர்ப்பதில் உரங்களின் தேவை மற்றும் அதன் முன்னேற்றம் குறித்து மாவட்ட விவசாய குழுவில் மற்றும் பருவகால கூட்டங்களில் கலந்துரையாடப்பட்டது. எவ்வாறாயினும், சம்பந்தப்பட்ட குழுக் கூட்டங்களை 2024 ஆம் ஆண்டு முதல் மாதந்தோறும் நடத்த ஏற்பாடு செய்வேன்.

9. மாவட்ட மற்றும் பிராந்திய போதைப்பொருள் தடுப்புக் குழுக் கூட்டங்கள் காலாண்டுக்கு 01 படி நடத்தப்பட்டிருக்கவில்லை.	போதைப்பொருள் தடுப்புக் குழு போன்ற தனியான குழுக்கள் செயற்படவில்லையென்பதுடன், ஒவ்வொரு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவும் மாதந்தோறும் போதைப்பொருள் தடுப்புத் நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம் குறித்து விசாரிக்க கூடுகிறது.
10. மாவட்ட காணிப் பயன்பாட்டுக் குழு குறைந்தது காலாண்டுக்கு ஒருமுறையாவது கூடியிருக்கவில்லை.	மாவட்டத்திற்கு கிடைத்துள்ள காணிச் சோதனைகளுக்காக தயாரிக்கப்பட்ட காணித் தகைமை அறிக்கைகளுக்காக குழு பரிந்துரை வழங்குவதற்காகவே காணிகள் பயன்பாட்டுக் குழு நடத்தப்படுகின்றது. 2022 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் போதிய காணிக் கோரிக்கைகள் கிடைக்காதிருந்ததால், அந்தக் காலாண்டில் குழு நடைபெறவில்லை. இரண்டாவது காலாண்டில் பெறப்பட்ட கோரிக்கைகள் மீது 2022.08.16 ஆம் திகதி குழு நடாத்தப்பட்டது. இறுதி காலாண்டுக்காக 2022.11.29 ஆம் திகதி மாவட்ட காணி பயன்பாட்டுக் குழு நடைபெற்றது. காணி கோரிக்கைகளின் அளவைக் கருத்தில் கொண்டு இந்தக் குழு நடத்தப்படுவதால், 2023 ஆம் ஆண்டில் 02 குழுக்களும் மற்றும் 2024 ஆம் ஆண்டில் 01 குழுவும் நடத்தப்பட்டுள்ளன.
11. திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்புகளில் வழங்கப்பட்டிருந்த பயிற்சி வாய்ப்புகளின் எண்ணிக்கை 50மூ க்கும் குறைவான அளவிலே இருந்தது	கொரோனா தொற்றுநோய் காரணமாக திட்டமிடப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் தாமதமாகியதுடன் 2023 ஆம் ஆண்டு முதல் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2023 ஆம் ஆண்டில் ஐஊவுயு நேஒவபுநபெழள நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 150 அரசு அதிகாரிகளை பயிற்றுவித்தல். 2023 ஆம் ஆண்டில் மின் - கிராம உத்தியோகத்தர் பயிற்சியின் கீழ் 824 கிராம உத்தியோகத்தர்களை பயிற்றுவித்தல். 2024 ஆம் ஆண்டில் 10 நாள் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 104 முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களை பயிற்றுவித்தல்.

	2024 ஆம் ஆண்டில் 173 புதிய கிராம உத்தியோகத்தர்களுக்கு 03 மாதங்களுக்கு உள்வாங்கல் பயிற்சி வழங்கப்படுதல். அனைத்து பிரதேச செயலகங்களில் மற்றும் மாவட்ட செயலகங்களின் கணக்காளர்களுக்கு மற்றும் ஒரு பாட அதிகாரிக்கு அரசாங்க சம்பள பதிவேட்டு முறை பற்றிய (புழளநசஅெநவெ ீயல சுழடட ளுலளவநஅ) 03 நாள் முழுமையான பயிற்சி முனுரு நிறுவனத்திற்கு அனுப்பி வழஙகுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.
12. அதிகபட்ச சேவைக் காலத்தை நிறைவு செய்த அதிகாரிகள் முறைப்படி இடமாற்றம் செயது அனுப்புவதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டிருக்கவில்லை.	05 வருடங்களுக்கு மேலாக ஒரு பணியிடத்தில் கடமையாற்றும் அதிகாரிகளின் பெயர்கள் பட்டியல்கள் இடமாற்றம் சபைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. வருடாந்த இடமாற்றங்கள் மற்றும் உள்ளக இடமாற்றங்களுக்கு விண்ணப்பிக்குமாறு அனைத்து அதிகாரிகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. 2025 வருடாந்த இடமாற்றங்கள் அழைக்கப்பட்டிருப்பதுடன் 05 வருடங்களுக்கு மேலாக ஒரே பணியிடத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களின் விபரங்கள் வருடாந்த இடமாற்றக் குழுவிடம் சமர்பிப்பதற்காக தயார்படுத்தப்பட்டு வருகின்றது.
13. மாவட்ட சுற்றாடல் குழு குறைந்தது 02 மாதங்களுக்கு ஒரு தடவை கூடக் கூடயிருக்கவில்லை.	2024ஆம் ஆண்டு முதல் சுற்றுச் சூழல் குழுக் கூட்டங்கள் 02 மாதங்களுக்கு ஒருமுறை நடாத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

Lalinda Gamage
Government Agent / District Secretary
Gampaha Administrative District

லலிந்த கமகே

மாவட்ட செயலாளர் / அரசாங்க அதிபர்

கம்பஹா நிருவாக மாவட்டம்

L.A.B.L. Gunasena
Chief Accountant

எல்.ஏ.பி.எல்.குணசேன

பிரதான கணக்காளர்

கம்பஹா நிருவாக மாவட்டம்

செயலாளரின் பரிந்துரை

மாவட்ட செயலாளரினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதுடன் அடையாளம் காணப்பட்ட குறைபாடுகளுக்கு தனிப்பட்ட கவனம் செலுத்தி அவற்றை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு மாவட்ட செயலாளரிக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது.

Pradeep Yasarathna
Secretary
Ministry of Public Administration, Home Affairs,
Provincial Councils & Local Government
(Home Affairs Division)
"NILA MEDURA" Elvitigala Mawatha, Colombo 05.

பிரதீப் யசரத்ன

செயலாளர்

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள்,

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

அமைச்சரின் பரிந்துரைகள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

அரசாங்க கணக்குக்குழு மூலம் மாவட்ட செயலாளரிற்கு வழங்கப்பட்டிருக்கும் ஆலோசனைகளுக்கு சிறப்பு கவனம் செலுத்தி, அக்குறைபாடுகள் மீண்டும் ஏற்படாமல் இருக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க அமைச்சின் செயலாளரிற்கு நான் அறிவுறுத்தியுள்ளதுடன், அச்செயற்பாடுகள் மூலம் 2024 ஆம் ஆண்டிற்குள் அதன் அடைவு மட்டத்திலிருந்து உயர் மட்டத்தை எட்ட முடியும் என்று எதிர்பார்க்கின்றேன்.

கௌரவ தினேஸ் குணவர்தன (பா.உ.)

பிரதம அமைச்சர் மற்றும்

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்